கற்பகம் திங்கள் இதழ்
KATPAKAM
விலை ரூபா 10/-

மலர்-02 டிசெம்பர்-2008 இதழ்-14

## குறளமுதம்-14

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்-2 - அறத்துப்பால் - வான் சிறப்பு**

"ஏரின் உழாஅர் உழவர் புயல் என்னும்
வாரி வறம் குன்றிக் கால்"

*மழை (எனும் வருவாய்) வளம் குன்றுமானால் (உழுது பயிரிடும்) உழவர் ஏர் பிடிக்க மாட்டார்.*

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு

# 'நிஷா' புயல் அனர்த்தங்களினால் சுமார் 65 இலட்சம் ரூபா நட்டம்!

**கூ.அ.திணைக்களம் தகவல்**

கடந்த நவெம்பர் மாதம் 25, 26ம் நாட்களில் பெய்த பெரும் மழை மற்றும் புயல்காற்றினால் யாழ்.மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு 64 இலட்சத்து 63 ஆயிரத்து 330 ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள இழப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பீட்டில் சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கத்திற்கு 26 லட்சம் ரூபாவும், கரவெட்டி ப.தெ.வ.அ.கூ.சங்கத்திற்கு 13 லட்சத்து 14 ஆயிரத்து 455 ரூபாவும் நட்டம் ஏற்பட்டுள்ளது.

ஏனைய சங்கங்களுக்கும் கணிசமான அளவுக்கு இழப்புகள் ஏற்பட்டுள்ளன. இதில் கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கத்திறகு 5 லட்சத்து 45 ஆயிரத்து 570 ரூபாவும், பருத்தித்துறை ப.தெ.வ.அ.கூ.சங்கத்திற்கு 1லட்சத்து 16 ஆயிரத்து 455 ரூபாவும், யாழ்ப்பாணம் ப.தெ.வ.அ.கூ.சங்கத்திற்கு 1 லட்சத்து 35 ஆயிரத்து 830 ரூபாவும், ஊர்காவற்றுறை ப.தெ.வ.அ.கூ.சங்கத்திற்கு 67 ஆயிரம் ரூபாவும், வேலணை ப.தெ.வ.அ.கூ.சங்கத்திற்கு 1 லட்சத்து 8 ஆயிரத்து 500 ரூபாவும், அரியாலை ப.தெ.வ.அ.கூ. சங்கத்திற்கு 2 லட்சத்து 81 ஆயிரத்து 430 ரூபாவும், அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ. சங்கத்திற்கு 4 லட்சத்து 77 ஆயிரத்து 40 ரூபாவும், தெல்லிப்பளை ப.தெ.வ.அ.கூ. சங்கத்திற்கு 1 லட்சத்து 65 ஆயிரம் ரூபாவும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும் வடமராட்சிக் கொத்தணிக்கு 4லட்சத்து 52 ஆயிரத்து 500 ரூபாவும், யாழ்.மாவட்ட சித்த வைத்திய கூ.சங்கத்திற்கு 1லட்சத்து 49 ஆயிரத்து 550 ரூபாவும், வடமாகாண ப.தெ.வ.அ.கூ. ச.சமாசத்திற்கு 50 ஆயிரம் ரூபாவும் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்!



அங்கத்தவர்கள்,
பணியாளர்கள்,
மற்றும் அனைத்து
கூட்டுறவாளர்களுக்கும்

**"கற்பகத்தின்"**
இதயம் கனிந்த
**நத்தார் புதுவருட**
நல்வாழ்த்துக்கள்.

**சேதமடைந்த திக்கம் வடிசாலைக் கட்டடத்தின் முன் பக்கத் தோற்றம்.**



# சமாசம் 20 இலட்சம் ரூபாவை ஓய்வூதியமாக வழங்கியுள்ளது!

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது உறுப்புரிமைச் சங்கங்களின் 60 வயது பூர்த்தியாகிய 165 அங்கத்தவர்களுக்கு ரூபா 20 லட்சத்தை மாதாந்த ஓய்வூதியமாக வழங்கியுள்ளது.

2006ம் ஆண்டு நடுப் பகுதியிலிருந்து சமாசத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அங்கத்தவர் ஓய்வூதிய நலத் திட்டத்தின் மூலம் இதுவரை 165 உறுப்பினர்கள் அவர்களது பங்களிப்புக்கு ஏற்ற வகையில் மாதாந்த ஓய்வூதியத்தை பெற்றுள்ளனர்.

சங்க ரீதியாக ஓய்வூதியம் பெற்ற அங்கத்தவர் விபரம் வருமாறு,

யாழ்ப்பாணம்-05, அரியாலை 07, கோப்பாய்-06, தெல்லிபளை-08, கரவெட்டி-15, பண்டத்தரிப்பு-09, கோண்டாவில்-16, சாவகச்சேரி-29, சங்கானை-06, பருத்தித்துறை-11, அச்சுவேலி-21, ஊர்காவற்றுறை-01, கொடிகாமம்-02, மானிப்பாய்-10, சுன்னாகம்-16, வேலணை-03

சமாசத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இவ் ஓய்வூதியத் திட்டம் ஏனைய கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஒரு முன்மாதிரியான செயற்பாடாக இருப்பது பாராட்டுக்குரியதென யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ், யாழ்.மேலதிக நீதிமன்ற நீதிபதி இ.த.விக்கினராஜா, வடமாகாண கூட்டுறவு ஆணையாளரும் கூட்டுறவுச் சங்க பதிவாளருமான எஸ்.சுப்பிரமணிய சர்மா, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணை யாளர் பொ.சிவலிங்கம் உள்ளிட்ட பலரும் தமது பாராட்டை தெரிவித்துள்ளனர்.

### சிந்தனைத்துளி

*"தண்ணீருக்குத்தான் ஆழம் உண்டு என்பதில்லை;
சிந்தனையில் ஊறி பிறக்கும் சொற்களுக்கும் ஆழம் உண்டு"!*
—பிளமிஸ்—

## கற்பகக்கரு

### ஓய்வூதியத் திட்டம்!

"உத்தியோகம் புருஷ லட்சணம்", "வேலையானாலும் அரச உத்தியோகமாக இருக்க வேண்டும்" என்று எமது முன்னோர்கள் அடிக்கடி கூறுவார்கள்.

அரசாங்க சேவையில் இணையும் ஒருவருக்கு குறிப்பிட்ட வயதெல்லையைக் கடந்தவுடன் அவருக்கு ஓய்வூதியம் காத்திருக்கும். வேலை பார்க்கும் மற்றொரு சாராருக்கு ஈ.பி.எப் என்று சொல்லப்படும் ஊழியர் சேமலாப நிதி கிடைக்கும். ஓய்வூதியம் பெறுபவர்கள் அதனை மாதந்தோறும் குறிப்பிட்ட திகதிகளில் பெற்றுக் கொள்வர். ஆனால் ஊழியர் சேமலாப நிதி பெறுபவர்கள் வேலையிலிருந்து இளைப்பாறும்போது அந்நிதிக்கு விண்ணப்பித்து அவரது சேவைக் காலத்திற்கு ஏற்ப ஒரு தொகைப் பணத்தை முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்நிலையில் பனம் தொழில் வல்லுனர்களின் சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அவர்கள் தொழில்செய்த பின்னர் அவர்களது பிற்காலத்தில் ஓய்வூதியம் சமாசத்தினால் வழங்கப்பட்டு வருகிறது.

இவ் ஓய்வூதியத்தை வழங்குவதற்கான நிதியை சமாசத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள சங்கங்கள் தமது அங்கத்தவர்களின் உழைப்பிலிருந்து பெற்றுக்கொள்ளும் நிதியில் ஒரு பகுதியை அவர்களது சேமிப்பாக சேர்த்து சமாசத்திற்கு வழங்கி வருகிறார்கள். அவர்களினால் வழங்கப்பட்டு வருகின்ற சிறு தொகைப்பணத்தை சமாசம் தகுந்த முறையில் பேணிப் பாதுகாத்து, அப்பணத்தையே அவர்களுக்கு ஓய்வூதியமாக வழங்கி வருகிறது.

சமாசத்தின் இந்நடைமுறையானது ஒரு அரசாங்கம் தனது ஊழியர்களுக்கு அவர்களது இளைப்பாற்று காலத்தில் ஓய்வூதியம் வழங்குவதற்கு சமமாக உள்ளது. வேறு எந்த கூட்டுறவு நிறுவனங்களோ தனியார் நிறுவனங்களோ தங்களது பணியாளர்களுக்கு இத்தகைய ஓய்வூதியம் வழங்குவதற்கான எவ்விதமான முன்னேற்பாடுகள் எதனையும் செய்து கொள்ளவில்லை.

இந்நிலையில், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது அங்கத்துவ தொழிலாளர்களினதும் தொழிலாளர் சார்ந்துள்ள குடும்பங்களினதும் பிற்கால வாழ்க்கையை வளம்படுத்துவதற்கு ஏற்ற வகையில் இவ் ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருவது பல்வேறு தரப்பினராலும் பாராட்டப்பட்டு வருகிறது. இத்திட்டம் அவர்களின் வாழ்வை ஒளிமயமாக்குவதுடன் எதிர்காலத்தில் அவர்களை கூட்டுறவில் நம்பிக்கை கொள்ளவும் வைக்கும் என்பதில் ஐயமில்லை.

*"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"*

-ஆசிரியர்-

## பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்

## கிளை நிர்வாக நடைமுறை விதிகள்

### 12. கிளை நிர்வாக சபைக் கூட்டங்கள்

**12.2.** ஒவ்வொரு கிளை நிர்வாக அங்கத்தவருக்கும் ஒரு வாக்குரிமை உண்டு. உறுப்புரிமையான தலைவருக்கு முடிவு செய்யும் மேலதிக வாக்குரிமை ஒன்று உண்டு.

**12.3.** நெறியாளர் சபை, சங்கத்தலைவர், கிளை நிர்வாக சபைத் தலைவர், 1/2 பகுதிக்கு மேற்பட்டோர் எழுத்து மூலம் செய்யும் வேண்டுகோளுக்கமைவாகவும் செயலாளர் அல்லது தலைவர் அழைக்கும்போது கிளை நிர்வாக சபைக் கூட்டம் கூட்டப்படல் வேண்டும்.

**12.4.** நிர்வாகசபைக் கூட்ட வரலாறுகள் உபவிதி 26ற்கு அமைவாக பேணப்படல் வேண்டும்.

**12.5.** தீர்மானங்களை இயற்றும்போது முடிந்தவரை ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பாக சமூகம் கொடுத்த உறுப்பினர் சகலரதும் பொது இணக்கத்தைப் பெற்ற பின்பு நிறைவேற்றுதல் சிறப்பாக அமையும்.

**12.6.** பதவியில் உள்ள அரைப்பங்கிற்கு மேற்பட்ட கிளை நிர்வாக உறுப்பினர் சமூகம் கொடுக்கும் கூட்டங்கள் நிறைவெண் கொண்ட கூட்டங்களாகக் கருதி அதில் நிறைவேற்றப்படும் விடயங்கள் முறையாக சட்டரீதியானவையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

### 13. கிளை நிர்வாக சபையின் பணிகள்

**13.1.** கிளைப் பொதுக்கூட்டத்திற்கு ஒதுக்கப்பட்டவை ஒழிந்த கிளையில் ஏனைய அதிகாரங்கள் கிளை நிர்வாக சபைக்கு உரித்தானவையாக இருக்கும்.

**13.2.** கூட்டுறவுச் சட்டம், உபவிதி, சங்கப் பொதுச்சபை, சங்க நெறியாளர் சபையின் தீர்மானங்களுக்கும் கூட்டுறவு ஆணையாளரின் சுற்று நிருபம் ஆகியன விதிக்கும் கட்டுப்பாடுகளுக்கு அமைவாக கிளை நிர்வாக சபையின் பணிகள் அமைதல் வேண்டும்.

**13.3.** அ. கிளைக்கான தலைவரையும் உபதலைவரையும் செயலாளரையும் தெரிவு செய்தல்.

ஆ. காலத்திற்கு காலம் வரைறுக்கப்படும் சங்கப் பொதுச்சபை பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல்.

**13.4.** கிளை நிர்வாக சபையில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அவசரமானால் ஒத்துத் தேர்தல் மூலம் சேர்ந்து மூன்று மாதங்களுக்குள் கிளைப் பொதுச்சபையின் அங்கீகாரத்தினை பெறுதல்.

**13.5.** கிளை அபிவிருத்திக்காக தேவைப்படும் நிதித் தேவைகளை சங்கப் பொதுச்சபை விதிக்கும் உச்ச வரம்பிற்கமைவாக நிர்ணயித்தல். **[வளரும்]**

## சங்க அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கு வெள்ள நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன!

கடந்த நவெம்பர் மாதம் 25, 26ம் திகதிகளில் நிஷா மற்றும் பெரு வெள்ளம் காரணமாக பாதிப்புக்குள்ளான பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கு ரூபா 2000 பெறுமதியான அத்தியாவசிய உணவுப்பொருட்களை அந்தந்த சங்கங்கள் வழங்கியுள்ளன.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், வலிகாமம் கொத்தணி, தென்மராட்சிக் கொத்தணி, அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.ச, அரியாலை ப.தெ.வ.அ.கூ.ச., யாழ்ப்பாணம் ப.தெ.வ.அ.கூ.ச., பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.ச., சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.ச., மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.ச., கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.ச., சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம் ஆகிய சங்கங்களே உணவுப்பொருட்களை வழங்கியுள்ளன.

## அங்கத்துவ சங்கங்களுக்கு ஊக்குவிப்பு!

தென்மராட்சி கொத்தணி 2009ம் ஆண்டுக்கான பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தவும், உறுப்புரிமைச் சங்கங்களின் அபிவிருத்திக்கு அவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் கொடுப்பனவுகள் உடனுக்குடன் வழங்கி வருவதாகவும் கொத்தணியின் பொதுமுகாமையாளர் திரு.அருள் தெரிவித்தார்.

# சமூக அறிவியலும் விஞ்ஞானமும்

# SOCIOLOGY SCIENCE

இ.சுப்பிரமணியம் -ஆசிரியர்

சமூக அறிவியல் என்ற பரந்த அறிவியல் ஏனைய துறைகளைச் சார்ந்த விஞ்ஞானத்துறைகளுள் ஒன்றாகும். சமூக அறிவியல் சமூகத்தைப் பற்றியும், மக்கள் உறவைப் பற்றியும், மக்கள் உறவால் ஏற்படும் விளைவுகளைப் பற்றியும், மக்களுடைய தனிப்பட்ட செயற்பாடுகளைப் பற்றியும், சமூக நிறுவனங்களைப் பற்றியும், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் , அவற்றுக்கான தீர்வுகளையும் ஆராயும் ஒரு விஞ்ஞான அறிவியலே சமூக அறிவியலாகும்.

சமூக அறிவியலுக்கு இதுவரை பல சமூக அறிவியல் பேரறிஞர்கள் பொருத்தமான வரைவிலக்கணங்களைக் கொடுத்துள்ளனர். சமூக அறிவியல் (Sociology) என்ற பதத்தை முதன்முதலாக சமூக அறிவியலின் தந்தை என அழைக்கப்படும் ஆகாஸ்ட் கொமட் (Augast Comate) என்பவரே உருவாக்கிப் பயன்படுத்தினார். இவர் சமூகத்தைப் பற்றியும், மனிதனின் ஆளுமையைப் பற்றியும் ஆராய்ந்தறியும் விஞ்ஞான அறிவியலே சமூக அறிவியல் என்று சமூக அறிவியலை விளக்கிக் காட்டியுள்ளார். முதன் முதலாக சமூக அறிவியலுக்கு விஞ்ஞான வடிவத்தைக் கொடுத்தவரும் இவரே.

இதன் பின்னர் இங்கிலாந்து தேசத்தில் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஹெர்பேட் ஸ்பென்சர் (Herbert Spencer) சமூக அறிவியல் கோட்பாடு என்ற நூலில் சமூகத்தைப் பற்றியும் சமூகத்தில் உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு சமூகக் கட்டமைப்புப் பற்றியும் அவற்றின் செயற்பாடுகளைப் பற்றியும் ஆராயும் விஞ்ஞான அறிவியலே சமூக அறிவியல் என விளக்கிக் கூறியுள்ளார்.

சமூக அறிவியல் பல்வேறு சமூகத்துடன் தொடர்புடைய விஞ்ஞான அறிவியல்களின் தொகுப்பாக அமைந்துள்ளது. அரசியல், பொருளியல், பண்பாட்டியல், மானிடவியல், புவியியல், முகாமையியல், உளவியல், ஒழுக்கவியல், விளையாட்டியல், சட்டவியல், பொழுதுபோக்கியல், படவரைவியல், குடும்பவியல், புள்ளிவிபரவியல், வைத்தியவியல், சமயவியல் போன்ற பல்வேறு விஞ்ஞான வியல்களுடன் சமூக அறிவியல் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதாக விளங்குகின்றது.

செலிக்மென் (Seligman) என்ற அறிவியல் பேரறிஞர் அனைத்துச் சமூக அறிவியல்களையும் அவற்றின் முக்கியமான கூறுகளையும் தொட்டுக்கொண்டும் விளக்கிக் கொண்டும் செல்வதால், சமூக அறிவியல் என்பது மிக மேலான சமூக விஞ்ஞான அறிவியலாகும் என்று விளக்கிக் காட்டியுள்ளார். மேற்கூறிய பேரறிஞர்களின் விளக்கங்களை மையமாகக் கொண்டு சமூக அறிவியலுக்கான, நவீன வரைவிலக்கணத்தை நாம் பின்வருமாறு வரையறுத்துக் கொள்ளலாம்.

சமூகத்தைப் பற்றியும், சமூக உறுப்பினரான மனிதனைப் பற்றியும், மனிதனுடைய சகல நடவடிக்கைகளைப் பற்றியும், மனிதனுக்கும், சமூகத்துக்கும் சேவை செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள சமூக நிறுவனங்களைப் பற்றியும், சமூக நிறுவனங்களின் செயற்பாடு பற்றியும், சமூகத்தையும் மனிதனையும் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளையும், அவற்றுக்கான தீர்வுகளையும் தெளிவாக ஆராய்ந்து விளக்கும் விஞ்ஞான அறிவியலே சமூக அறிவியலாகும் என்று சமூக அறிவியலுக்கான, நவீன வரைவிலக்கணத்தை முன் வைக்கலாம்.

-வளரும்-




சோற்றுக்குச் சேர்த்துக் கொள்ளக் கூடிய உப உணவாகவும், ஒரு முழு உணவாகவும், சில வேளைகளில் பொரித்து நொறுக்குத் தீனியாகவும் நாம் பயன்படுத்தும் ஈரப்பலா (Bread Fruit) சில நாடுகளில் பழமாகவும் சாப்பிடுகின்றனர்.

ஈரப்பலா மாப்பொருளான காபோஹைதரேட் மற்றும் புரோட்டின் நிறைந்த உணவு மாத்திரமன்றி, இரும்புச் சத்து, கல்சியம், பொட்டாசியம், நியாஸின் மற்றும் ரைபோஃப்லோவினும் அடங்கியுள்ளது. மேலும் ஈரப்பலாவில் காபோஹைதரேட் அதிகமிருப்பதோடு, புரோட்டின் குறைவாகவே காணப்படு கின்றது.

இது உருளைக் கிழங்கிற்கு மாற்றுணவாகும். இதன் சத்துக் கூடிக் குறைவது, அதனைச் சமைக்கும் விதத்தில் தங்கியுள்ளது. இளங் காயைவிட முற்றிய காய் அதிக சத்துள்ளதாகும்.

சோள மாவுடன் ஈரப்பலாவைச் சேர்த்துச் சமைக்கும் உணவுகளில் அதிக சக்தியுள்ளது. ஈரப்பலாவை நாம் உணவாகவே பாவித்தாலும் ஒரு சில நாடுகளில் இதனை மருந்தாகவும் பாவிக்கின்றனர். மேற்கிந்தியத்தீவு மக்கள் சற்று மஞ்சள் நிறமான ஈரபலா இலைகள் அவித்த நீரை அதிக இரத்தமுத்தத்தை குறைக்கவும், நீரிழிவு நோயைக் குறைக்கவும் அருந்துகின்றனர். இதன் இலையைப் பொசுக்கி தேமல் போன்ற தோல் வியாதிகளுக்குப் பூசுகின்றனர்.

வாய் மற்றும் நாக்குப் புண்களுக்கு இதன் இள இலைகளை நசுக்கி வைக்கலாம். சற்று பொரிந்த இள இலைகள் பல் மற்றும் முரசு வலிக்கு வைத்துக் கொள்ளலாம். உயர் இரத்தமுத்தத்தைக் குறைக்கவென்று இதனை அதிகம் சாப்பிட்டால் குருதியமுத்தம் குறைந்து ஊறு விளைவிக்கும்.

தேகத்தில் ஆங்காங்கே தோன்றும் தடிப்பு, தமும்புகளுக்கும் ஒரு சில பக்டீரியாக்களை அழிக்கவும் இம் மரத்தின் சாறு பயன்படுத்தப்படுகின்றது. மூட்டு விலகல்களுக்கும் இச்சாறு பூசுகின்றனர். கரைத்து எடுத்த ஈரப்பலா பிசின் வயிற்று நோய்களுக்கு ஒரு மருந்தாகும். இவ்வாறான மருத்துவ முறைகள் முன்னர் நம்நாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஈரப்பலாவிலிருந்து சிறந்த பலன் பெறவேண்டுமாயின் எல்லாப் பகுதிகளும் ஒரே அளவான சற்று வெளுத்த பச்சைக் காய்களைத் தெரிவு செய்துகொள்ள வேண்டும். சற்று காவி, கிரீம், வெளுப்பு நிறமுடைய காய்களே சிறந்தன. அவ்வாறே அதன் பருமனுக்கேற்ற உத்தேச பாரமும் இருக்க வேண்டும்.

விதையற்ற ஈரப்பலாவைவிட விதையுள்ள காய்களே அதிகம் சத்துள்ளன. ஆனால் விதையுள்ள காய்கள் சற்று அரிதாகவே இருக்கின்றன.

### 100 கிராம் ஈரப்பலாவிலுள்ள சத்து

கலரி 105-109, ஈரம் 62.79-89.16கிராம், புரதம் 1.39-2.24கிராம், கொழுப்பு 0.19 -0.86,கிராம், காபோஹைதரேட் 21.5கிராம், கல்சியம் 0.005மி.கிராம், நார்ச்சத்து 1.08 கிராம், பொஸ்பரஸ் 0.04 மி.கிராம், இரும்பு 0.61-2.4கிராம், கரோட்டின் 0.0004 மி.கி., தயமின் 0.08 மி.கி, ரீபோஃப்லோவின் 0.033 மி.கி., நியாஸின் 0.506 மி.கி., அஸ்கோடிக் அமிலம் 15.33 மி.கிராம்.

"மிக நெடுங் காலத்திற்கு முன் ஷேய்துல்லா என்றொருவன் இருந்தான். அவன் வேலை செய்ய விரும்பாத முழுச் சோம்பேறி.




பல நாட்கள் அவன் மனைவியும் குழந்தைகளும் சாப்பிட ஒன்றுமில்லாமல் பட்டினி கிடந்தனர். புத்தாடை வாங்கலாமென அவர்கள் கனவிலும் நினைக்க முடியவில்லை.

வேலை செய்யாமலே படுத்துக் கிடந்தால் குடும்பம் என்னாவது என்று அவன் மனைவி அவனைக் கோபித்துக் கொள்வாள்.

"நீ கவலைப்படாதே, எல்லாம் சரியாகிவிடும்!" என்று ஷேய்துல்லா அவளிடம் சொல்வான். "இப்பொழுது வறுமையில் வாடுகிறோம், ஆனால் விரைவில் நமக்குச் செல்வம் கிடைக்கப் போகிறது!" என்று சமாதானம் கூறுவான்.

"நன்றாய் இருக்கிறதே! சிறு விரலை அசைப்பதற்குக்கூட விருப்பமின்றி நாள் தவறாமல் வீட்டிலே படுத்துக் கிடக்கிறாய் நீ. நமக்கு எங்கிருந்து செல்வம் கிடைக்கும்?" என்று அவள் புலம்புவாள்.

"காத்திரு, காலம் வரும்! நாம் செல்வந்தர்களாகப் போகிறோம், பாரேன்!" என்று திரும்பவும் சொல்லிவிட்டு ஷேய்துல்லா சும்மாயிருப்பான்.

மனைவி காத்திருந்தாள், குழந்தைகள் காத்திருந்தனர், ஆனால் காலம் வரவில்லை. எப்பொழுதும் போல ஏழைகளாகவே இருந்தனர்.

"காத்திருந்து பயனில்லை, இம்மாதிரியே போனால் நாம் பட்டினியால் சாக வேண்டியதுதான்" என்று மனைவி முறையிட்டாள்.

ஆகவே ஷேய்துல்லா தனது ஏழ்மைக்கு எப்படி முடிவு கட்டுவதென்று யாராவது மகானிடம் சென்று புத்திமதி கேட்பதெனமுடிவு செய்து கொண்டான். பயணத்துக்குத் தயார் செய்து, புறப்பட்டுச் சென்றான்.

மூன்று பகலும் மூன்று இரவும் நடந்தபின் எலும்பும் தோலுமான ஒரு ஓநாயைச் சந்தித்தான்.

"தம்பி, நீ எங்கே போகிறாய்" என்று ஓநாய் அவனைக் கேட்டது.

"எப்படிச் செல்வந்தனாவதென்று புத்திமதி கேட்பதற்காக ஒரு மகானைத் தேடிச் செல்கிறேன்" என்றான் ஷேய்துல்லா.

"அப்படியே நீ அவரிடம் விசாரித்து நான் என்ன செய்யலாமெனத் தெரிந்து கொண்டு வாயேன்" என்று அந்த ஓநாய் ஷேய்துல்லாவை வேண்டிற்று. "மூன்று ஆண்டுகளாய் நான் வயிற்று வலியால் துன்புறுகிறேன். இராப் பகலாய் வலி என்னை வதைக்கிறது. நீ பார்க்கப் போகும் மகான் நான் இந்த வயிற்று வலியிலிருந்து விடுதலைபெற ஏதாவது வழி சொல்வார்" என்றது ஓநாய்.

"சரி, அவரிடம் கேட்டுத் தெரிந்து வருகிறேன்" என்று ஷேய்துல்லா பதிலளித்தான்.

பிறகு அவன் தன் பாதையில் தொடர்ந்து சென்றான்.

மீண்டும் மூன்று பகலும் மூன்று இரவும் நடந்தபின் சாலையோரத்தில் ஓர் ஆப்பிள் மரத்தைக் கண்ணுற்றான்.

"தம்பி, நீ எங்கே போகிறாய்?" என்று ஆப்பிள் மரம் அவனைக் கேட்டது.

"வேலை செய்யாமலே நன்றாய் வாழ்வது எப்படி என்று புத்திமதி கேட்பதற்காக ஒரு மகானைத் தேடிச் செல்கிறேன்."

"நான் என்ன செய்வதென்பதையும் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு வாயேன்" என்றது அந்த ஆப்பிள் மரம். "வசந்தம் பிறந்ததும் நிறைய மொட்டுகள் விடுகிறேன், ஆனால் மொட்டுகள் மலர்ந்ததும் கருகிவிடுகின்றன, காய்ப்பதே இல்லை. இது ஏன் என்று அந்த மகானிடம் கேட்டுப்பாரேன்" என்று அது வேண்டிற்று.

"சரி, கேட்டுப் பார்க்கிறேன்" என்று சொல்லி ஷேய்துல்லா தொடர்ந்து நடந்தான்.

மீண்டும் மூன்று பகலும் மூன்று இரவும் நடந்தபின் ஆழமான ஓர் ஏரியை வந்தடைந்தான்.

திடுமென ஒரு பெரிய மீன் நீருக்குமேல் தலையை உயர்த்திற்று.

"தம்பி, நீ எங்கே போகிறாய்?" என்று கேட்டது அந்த மீன்.

"புத்திமதியையும் உதவியையும் நாடி ஒரு மகானைத் தேடிச் செல்கிறேன்."

"என் சார்பிலும் நீ அவரிடம் ஒன்று கேட்டுத் தெரிந்து வாயேன்" என்றது அந்த மீன். "ஏழு ஆண்டுகளாய்த் தொண்டையில் எனக்கு வலிக்கிறது, தாங்க முடியவில்லை. இந்த வலி தீர்வதற்கு வழி என்னவென்று அந்த மகானுக்குத் தெரிந்திருக்கலாம், கேட்டுப் பாரேன்" என்று அது வேண்டிக் கொண்டது.

"சரி கேட்டுப் பார்க்கிறேன்" என்று கூறிவிட்டு ஷேய்துல்லா தொடர்ந்து நடந்தான்.

**அஸர்பெய்ஜான் நாட்டுக் கதை**

மூன்று பகலும் மூன்று இரவும் நடந்தபின் ரோஜாச் செடிகள் அடர்ந்திருந்த ஓரிடத்தை அடைந்தான். நீளமான வெண்ணிறத் தாடியுடைய கிழவர் ஒருவர் அங்கே ஒரு செடிக்கடியில் உட்கார்ந்திருக்கக் கண்டான்.

ஷேய்துல்லாவைப் பார்த்ததும் அந்தக் கிழவர் "ஷேய்தல்லாவா? வா தம்பி! உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

ஷேய்துல்லாவுக்கு தூக்கிவாரிப் போட்டது.

"என்னுடைய பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்? நான் தேடிச் செல்லும் அந்த மகான் நீங்கள்தானோ?" என்றான் அவன்.

"ஆம், நான்தான். என்னிடம் நீ கேட்க விரும்புவது என்ன? சீக்கிரமாய்ச் சொல்" என்றார் அந்தக் கிழவர்.

தான் வந்த காரணத்தையும், தான் தெரிந்துகொள்ள விரும்பியதையும் ஷேய்துல்லா அவரிடம் சொன்னான்.

"என்னிடம் நீ தெரிந்துகொள்ள விரும்புவது வேறு ஒன்றும் இல்லையா?" என்று அந்த மகான் கேட்டார்.

"இருக்கிறது" என்றான் ஷேய்துல்லா. ஓநாயும் ஆப்பிள் மரமும் மீனும் அவரிடம் கேட்டுத் தெரிந்து வருமாறு சொல்லியவற்றை அவரிடம் கூறினான்.

மகான் யாவற்றுக்கும் பதில அளித்தார்.

"அந்த மீனுடைய தொண்டையில் ஒரு பெரிய இரத்தினம் அடைத்துக்கொண்டிருக்கிறது. இந்த இரத்தினக் கல்லை வெளியே எடுத்ததும் மீனுக்குத் தொண்டை வலி நின்றுவிடும். ஆப்பிள் மரத்துக்கடியில் ஒரு பெரிய பானை நிறைய வெள்ளிக் காசு புதைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பானையைத் தோண்டி எடுத்ததும் ஆப்பிள் மரத்தின் மலர்கள் கருகாமல் நிறையக் காய்க்கத் தொடங்கும். ஓநாயின் வயிற்றுவலி தீர வேண்டுமாயின் அது தன் எதிரே வரும் முதலாவது சோம்பேறியை அடித்துத் தின்ன வேண்டும்."

"என்னுடைய வேண்டுகோள் குறித்து ஒன்றும் சொல்லவில்லையே" என்றான் ஷேய்துல்லா.

"உனக்கு வேண்டியவை யாவும் உனக்குத் தரப்பட்டுள்ளன, போய் வா!"

அளவிலா ஆனந்தமடைந்த ஷேய்துல்லா அதற்குமேல் மகானிடம் எதுவும் கேட்கவில்லை. வீட்டுக்குத் திரும்பி நடந்தான்.

ஓயாமல் நடந்து, அந்தப் பெரிய மீன் ஆவலுடன் காத்திருந்த ஏரியை வந்தடைந்தான்.

"மகான் எனக்குக் கூறியது என்ன?" என்று அது அவனிடம் கேட்டது.

"உன் தொண்டையில் ஓர் இரத்தினம் அடைத்துக்கொண்டிருக்கிறது, அதை வெளியே எடுத்ததும் உன் தொண்டை வலி நின்றுவிடும்" என்று சொல்லிவிட்டு ஷேய்துல்லா அவசரமாய் அங்கிருந்து செல்வதற்காக அடியெடுத்து வைத்தான்.

"தம்பி, என்மீது இரக்கம் கொண்டு என் தொண்டையிலிருந்து இரத்தினத்தை வெளியே எடுத்துவிட்டுப் போயேன்!" என்று அந்த மீன் மன்றாடியது. "நீ என் தொண்டை வலி நிற்பதற்கு உதவுவதோடு, உனக்கு ஓர் இரத்தினத்தையும் பெற்றுக்கொள்வாய்" என்றது.

"எனக்கு இந்த வேலையும் வேண்டாம், உன் இரத்தினமும் வேண்டாம்! விரலை அசைக்காமலே நான் பணக்காரனாகப் போகிறேன்!" என்று சொல்லிவிட்டு ஷேய்துல்லா அங்கிருந்து நடந்தான்.

ஆப்பிள் மரத்தை வந்தடைந்தான். அவனைக் கண்டதும் அதன் கிளைகள் ஆடிக் குலுங்கின, அதன் தழைகள் சலசலத்தன.

"எனக்கு என்ன நிவாரணமென மகானிடம் விசாரித்தாயா?" என்று ஆப்பிள் மரம் கேட்டது.

"விசாரித்தேன்" என்றான் ஷேய்துல்லா. "உன் வேர்களுக்கு அடியில் ஒரு பெரிய பானை நிறைய வெள்ளிக் காசு புதைந்திருக்கிறது. பானையைத் தோண்டியெடுத்துவிட வேண்டும். பிறகு உனது மலர்கள் கருகாமல் ஆப்பிள்களாய்க் காய்க்கும்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து செல்லப் போனான்.

ஆனால் ஆப்பிள் மரம் அவனிடம் மன்றாடியது "நீ தயவு புரிய வேண்டும்! என் வேர்களுக்கு அடியில் பானையிலுள்ள வெள்ளியைத் தோண்டி வெளியே எடுத்துவிட்டுப் போயேன். எனக்கும் உதவியாய் இருக்கும், உனக்கும் வெள்ளி கிடைக்கும்" என்றது.

"ஓ, எனக்கு ஏன் இந்த வேலை? எப்படியும் யாவும் எனக்குக் கிடைக்கமென மகான் சொல்லியிருக்கிறாரே" என்று பதிலளித்துவிட்டு ஷேய்துல்லாஅங்கிருந்து சென்றான்.

தொடர்ந்து அவன் நடந்தான். எலும்பும் தோலுமான அந்த ஓநாயைச் சந்திக்கும் வரை நடந்தான். ஷேய்துல்லாவைப் பார்த்ததும் ஓநாய் பரபரப்படைந்துவிட்டது.

"சரி, எனக்கு மகான் அளித்த ஆலோசனை என்ன?" என்று அது அவனைக் கேட்டது. "சீக்கிரமாய்ச் சொல்லு, எனக்கு வயிற்று வலி தாங்க முடியவில்லை!...." என்றது.

"நீ சந்திக்கும் முதலாவது சோம்பேறியை அடித்துத் தின்றாயானால், உடனே நலமடைந்து விடுவாய்" என்று ஷேய்துல்லா பதிலளித்தான்.

ஓநாய் ஷேய்துல்லாவுக்கு நன்றி தெரிவித்தது. வருகிற வழியில் அவன் பார்த்தவற்றையும் செய்தவற்றையும் சொல்லும்படி கேட்டது அது. மீனையும் ஆப்பிள் மரத்தையும் பார்த்தது குறித்தும், அவை உதவுமாறு தன்னைக்

(7ம் பக்கம் பார்க்க.)

## ஆசான்

'அ' னா சொன்னதும் –ஆசான்
அரவணைத்துக்காப்பதும்–ஆசான்
ஆத்திசூடி சொன்னதும்–ஆசான்
ஆலம் விருட்சம் ஆசான்
இயல் இசை நாடகம் –ஆசான்
இன்பம் தருபவர் –ஆசான்
ஈன்றிடும் அன்னைபோல்–ஆசான்
ஈடில்லா தெய்வமும் –ஆசான்
உயிரினும் உன்னதம் –ஆசான்
உண்மைகள் உரைப்பதும்–ஆசான்
ஊனினை உருக்கியே–ஆசான்
ஊன்றுகோல் ஆனவர்–ஆசான்
எண்ணிலும் எழுத்திலும்–ஆசான்
எல்லோர்க்கும் தெய்வமாய்–ஆசான்
ஏற்றிடும் ஏணிபோல்–ஆசான்
ற்றியே விடுபவர்–ஆசான்
ஐயம் தீர்புற –ஆசான்
ஐம்புலன் உணர்த்திடும்–ஆசான்
ஒழுக்கத்தைச் சொல்லியே –ஆசான்
ஒற்றுமைப்படுத்திடும் –ஆசான்
ஓதிடும் மறைகளும்–ஆசான்
ஓயாமல் காப்பதும்–ஆசான்
ஔவயம் பேசியே–ஆசான்
ஔவை வாக்கினர்–ஆசான்
'அ' னா சொன்னதும்–ஆசான்!

வல்லைவாசன்
அச்சுவேல்.

## பலியும் பழியும்

கிணறு ஒன்று வெட்டி
தண்ணீர் கண்ட காரணத்தால்
கிணற்றுப் பொங்கல் நடக்கிறது
வடை முறுக்கு பால்றொட்டி என
வகை வகையாய்ப் பலகாரம் பண்ணி–புதுப்
பானை வைத்து பொங்கலாக்கி
படையல் நடந்தது–கூடவே
கோழி பிடித்து தலை வெட்டி
இரத்த அபிஷேகம் கிணற்றுக்கு....
ஏன் என்று கேட்டேன் அதிர்ந்தவனாய்
இரத்தப்பலி கொடுத்தால்தான்
கிணறு இடைவிடாது ஊற்றெடுக்குமாம்..
அடப் பாவிகளா...!
நீயே பலியிடப்படும் வாழ்வியலுக்குள்
இருந்துகொண்டுமா பலி இடுகிறாய்?
வேண்டாம் திருத்திக்கொள்
பலியிடப்படும் பழியால்தான்–நீயும்
பலியிடப்படும் படலம் தொடர்கிறது
புரிந்துகொள்...!

தே.யோ.தவராஜா.
கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.ச.

## தாய் அன்பு!

ஈரைந்து மாதங்கள் கருவிலே
எனைச் சுமந்து
ஈன்றெடுத்த பின்னும் காலம் முழுவதும்
கண் விழித்து என்னை காத்தாய்

உதிரத்தை பாலாக்கி என் உடலுக்கு
ஊட்டம் தந்தாய் அம்மா
நிலாச்சோறு நீயூட்ட
உன் நிலாமுகம் நான் பார்த்து
உணவு உண்டு மகிழ்ந்தேன்

என்பிஞ்சு விரல் நீ பிடிக்க
உன் தயவில் நடை பயின்றேன்
பள்ளி பருவம் வந்ததும்
படாத கஷ்ரமெல்லாம் நீ
சுமந்து என்னை படிக்க வைத்தாய்

பரீட்சை நெருங்குகையில் அம்மா
பசி தூக்கம் நீ மறந்து
என்னோடு துணையிருந்தாய்
பரீட்சையில் சித்தியடைந்ததும்
மகிழ்வடையும் நீ –அன்பிற்கு
இலக்கணம் அம்மா!
பொறுமையின் சிகரம் நீயம்மா!

சி.றஜீவன்– ஆண்டு–6

## கவியின்பம்

## அன்னையின் தவிப்பு!

அன்னை தவிக்கிறாள்
தலைகுனிந்து நிற்கிறாள்
வளமான வாழ்வை எண்ணி
கண்கள் குளமாகி நிற்கிறாள்
கடும் துயரோடு வாழ்கிறாள்

நித்தம் நித்தம் அலைகின்றாள்
பித்துப் பிடித்து ஓடுகின்றாள்
சத்தம் கேட்டு அடங்குகிறாள்
புத்தம் புது வாழ்வை எண்ணி
–ஏங்குகிறாள்

நித்திரை இன்றி வாடுகிறாள்
இக்கரையை எண்ணி ஏங்குகிறாள்
பத்தரை மாற்றுத் தங்க மலரை
பரிதவிக்க விடுதல் தகுமா
சொல்லுங்கள்!

செல்வி.செ.சிவலோஜினி.
முன்பள்ளி ஆசிரியை.
ப.தெ.வ.அ.கூ.ச.
கோண்டாவில்

## சமதர்மம் மலர்ந்திடுமா?

நீளும் இனப்போர்
முடிவின்றித் தொடரும் போர்
மாளும் உயிர்கள் போரதனால்
ஆளும் அநீதி போரதனால்

கொலை கொள்ளை தொடரும்
விலைவாசி அதிகரிக்கும்
உலைவைக்க வழியறியாது
மக்கள் உணவுக்காய் ஏங்கவரும்

தாக்கம் மனதில் வர
தூக்கம் எங்கே வரும்?
ஆக்கும் உயிரதனை
காக்க வழி வருமா?

யுத்தம் முடிவுக்கு வருமா
சத்தம் நின்றிடுமா?
சத்தியம் வெற்றி பெறுமா?
சமதர்மம் மலர்ந்திடுமா?

கே.எம்.தியாகராஜா.
இலிகிதர்.
ப.தெ.வ.அ.கூ.ச.
கொடிகாமம்.

## கூட்டுறவை நாம் காப்போம்!

கூட்டுறவு ஏற்றிவைத்த கொள்கைகளை
செம்மையாக வழி நடாத்தி
க்கனம் என்கின்ற செம்மையான வழியில்
சழிப்பு என்கின்ற செழுமையினை நாம் அடைந்து
பரஸ்பர உதவி என்கின்ற பண்பினை வளர்த்து
கூட்டுறவில் எம்மை நாமே என்றும் வளமாக்குவோம்

ஆலைகள் அமைத்து எங்கள் வேலைகள் பெருக்கி
நல்ல சாலைகள் சமைத்து வாழ்வின் மேன்மை
நிலையைத் தொட்டு சோலைகள் நிறைந்த
சுதந்திர வாசலைக் காண சேவைகள் செய்யும்
எங்கள் சீர்பெறும் கூட்டுறவைக் காத்து
எம்மை நாமே என்றும் வளமாக்குவோம்!

கூட்டுறவு என்பது அலாவுதீனின் அற்புத விளக்கைப்போல்
தேவைகள் உள்ள போதெல்லாம் சேவைகள் செய்து
உதவும் பூதமாய்க் கூட்டுறவு எங்கள் புவிதனில் காத்திருக்க
நாதமாய் நாங்கள் சென்று நல்லபடி வணங்கித் தொழுது
வேண்டிய வரமெல்லாம் வெகுமானமாய் பெற்று நிதம்
எம்மை நாமே என்றும் வளமாக்கிடுவோம்

அ.சின்னராசா.
தலைவர்.கோண்டாவில்.ப.தெ.வ.அ.கூ.ச.

# உரிய பண்புகளை கூட்டுறவு தன்னகத்தே கொண்டது!

கூட்டுறவுப் பண்புகள் யாவும் மக்களுடைய வாழ்க்கை முறை அபிவிருத்திய டையக் கூடியதாக உருவாக்கப்பட்டுள்ளது. 'கூட்டுறவே நாட்டுயர்வு', 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' , 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' , 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமையின்றேல் அனைவருக்கும் தாழ்வு', ஒன்றுகூடி அனைவரும் உழைத்து, கூட்டுவாழ்வு வாழ்தல், ஏற்றத் தாழ்வுகளை மறந்து அனைவரும் சமாதானமாக வாழ்தல், ஒற்றுமை, ஐக்கியம், கூட்டுறவு, விடாமுயற்சி, சுறுசுறுப்பு, சுயஉதவி, பரஸ்பர உதவி, சிக்கனம், சேமிப்பு, அறவழியில் எவருக்கும் தீங்கு விளைவிக்காது மனிதநேய மார்க்கத்தில் செயற்படல், நல்லெண்ணத்துடன் உலக மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒருவருக்கு ஒருவர் உதவிக் கொள்ளுதல், ஒவ்வொருவரும் அனைவருக்கும், அனைவரும் ஒவ்வொருவருக்கும் என்பன கூட்டுறவுப் பண்புகள் ஆகும். இவை மனித மேம்பாட்டுக்கும் சமூக மேம்பாட்டுக்கும் ஊன்றுகோலாக அமைந்துள்ளன.

1995ம் ஆண்டு அகில உலக கூட்டுறவு சம்மேளனம் வடிவமைத்து வெளியிட்ட ஏழு கூட்டுறவுக் கொள்கைகளும் மனித மேம்பாட்டுக்கும், சமூக மேம்பாட்டுக்கும் உகந்த மனித நேயக் கொள்கைகளாக விளங்குகின்றன. கூட்டுறவுக் கொள்கைகளில் சுதந்திரம்,சமத்துவம், சகோதரத்துவம், அந்நியோன்யம், மானசீகம், மனிதநேயம், மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகள், அன்பு, பண்பு, ஒழுக்கம் போன்ற மனித மேம்பாட்டுக்கு உகந்த அம்சங்கள் கொழுந்துவிட்டுப் பிரகாசிக்கின்றன.

கூட்டுறவு நிறுவனங்கள் ஒரு பொருளாதார, கலாச்சார, சமூக நிறுவனங்களாக மட்டுமல்ல, "அது ஒரு சீரிய, தூய்மையான, தலைசிறந்த வாழ்க்கை முறையாகவும் விளங்குகின்றது". Purtity and Excellent Life Method) என்று அயர்லாந்து தேசத்தின் கூட்டுறவுத் தந்தை பேரறிஞர் சேர் ஹேரேஸ் பிளாங்காட் கூறியுள்ளார். கூட்டுறவு நிறுவனங்கள் இலாப நோக்கமில்லாமல் சேவை நோக்குடன் இயங்குவதாகும். அத்தியாவசிய பொருட்களையும், சேவைகளை யும் நியாயமான விலையில் தரமானவையாகவும் சரியான அளவு நிறையிலும் அங்கத்தவர்களுக்கு நீதியான முறையில் பங்கிட்டுக் கொடுப்பதாலும் அங்கத்தவர்களின் தொழில்துறைகளை நன்கு அபிவிருத்தி செய்து வேலை வாய்ப்புக்களையும் வருமானத்தையும் பன்மடங்காக அதிகரிப்பதாலும் பாலர் கல்வி,முதியோர் கல்வி, மகளிர் கல்வி, தொழிற்கல்வி, வாழ்வாதாரக் கல்வி போன்றவற்றை போதித்து அங்கத்தவர்கள், அவர் சார்ந்த அனைவரையும் நன்மக்களாகவும் ஒழுக்கம் நிறைந்த புத்திஜீவிகளாக்குவதால் கூட்டுறவு ஒரு புனிதமான வாழ்க்கை முறையாக வுள்ளது.

மேற் கூறப்பட்ட பண்புகளை தன்னகத்தே கொண்ட ஒரு தூய்மையான கூட்டுறவு அமைப்புக்களில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களையும் அடித்துக் கூறமுடியும். ஏனென்றால் சமூகத்தின் மத்தியில் கூட்டுறவாளர் எப்படி வாழ வேண்டும், அவர்களுக்குரிய பண்புகள் என்ன என்பதை அறிந்து, தெரிந்து கொண்டமையால்தான் பனை வளம் சார்ந்த நிறுவனம் பல முன்னேற்றகரமான சேவைகளை, சிறந்த திட்டங்களைத் தீட்டி அங்கத்தவர்களுக்கு பயன்பல செய்கின்றனர். ஓய்வுக் காலத்தில் ஓய்வூதியம் கிடைக்கும் அளவுக்கு திட்டங்கள் செயற்படுத்துவது பாராட்டத்தக்கது. ஒரு நாட்டின் அரசாங்கம் நாட்டு மக்களுக்கு நிறைவு செய்ய வேண்டிய பணிகள் யாவற்றையும் சிறப்பாக புரிவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் அளவு கடந்த உதவிகளையும் பங்களிப்புக்களையும் வழங்குவதால் கூட்டுறவுச் சங்கங்கள் மனித மேம்பாட்டுக்கும் சமூக மேம்பாட்டுக்கும் உரமாக அமைகின்றன.

சமூகத்திலுள்ள அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், வங்கிகள், கம்பனிகள், தனி வியாபார நிறுவனங்கள், பங்குடமைகள் போன்ற பல நிறுவனங்களுடன் கூட்டுறவு நிறுவனங்களை ஒப்பு நோக்கும் போது, கூட்டுறவு நிறுவனங்கள் மனித மேம்பாட்டுக்கும் சமூக மேம்பாட்டுக்கும் உயர்ந்த மனித நேயம்மிக்க நிறுவனங்களாக விளங்குவது பாராட்டுக்குரியதாகும்.

**மூலம்:-**

**"சமூக அறிவியல் இயற்கை விஞ்ஞானமும் கூட்டுறவு அபிவிருத்தியும்" எனும் நூலிலிருந்து.....**

உலக கூட்டுறவு நிறுவனங்களில் "உலகத்தைத் தழுவும் தன்மை", "உலமயமாதல்"(Globalism), "உலக தரிசனம்" (World Vision) போன்ற கொள்கைகள் உலக மக்களின் அரசியல், பொருளாதார, சமூக பிரச்சினைகள் யாவற்றையும் முற்றாக வேரறுத்து பொருளாதார வளமும் செல்வச் செழிப்பும், அமைதியும் நிறைந்த உலக மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து உருவாக்கிய ஒரு ஒன்றுபட்ட உலக கூட்டுறவுச் சமூகத்தை (Unity of World Co-Operative Society) உருவாக்குவதையே வலியுறுத்தி நிற்கின்றன. சமூக முரண்பாடுகள், வகுப்பு வேறுபாடுகள், கலகங்கள், புரட்சிகள், உள்நாட்டுப் போர்கள், உலக மகா யுத்தங்கள் இல்லாத அமைதியும் பொருளாதார வளமும் ஒழுக்கமும்நிறைந்த நன்மக்கள் நிறைந்த உயர்ந்த சமூகமொன்றை ஒன்றுபட்ட உலக கூட்டுறவு சமூகத்தால் மட்டுமே உருவாக்க முடியும். இதனை நிறைவு செய்வதற்காக நாம் அனைவரும் கூட்டுறவுப் பண்புகளுடன் அல்லும் பகலும் அயராது உழைப்போமாக.

## போரும் ஒரு கலைதான்!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்(திருக்குறள் வெளிவந்த காலத்தில்) சீனாவை **சன்சூ** எனும் போர் வீரன் ஆண்டுவந்தான். இவன் பல தேசங்களை வென்றவன். தோல்வியே காணாத வெற்றி வீரனாக திகழ்ந்தான் இவன் போர்த் தந்திரங்களைப் பற்றியும் நுணுக்கங்கள் பற்றியும் **"போரெனும் கலை" (ART OF WAR)** எனும் புத்தகத்தை எழுதினான். இப் புத்தகத்திலிருந்து சில குறிப்புகள்:-

"எவன் ஒருவன் எப்பொழுது எதிரியைத் தாக்க வேண்டும், எப்பொழுது தாக்கக் கூடாது என்று அறிந்திருக்கிறானோ அவனே போரில் வெற்றி பெறுவான்.

தன்னையும் அறிந்து எதிரியையும் நன்கு அறிந்தவன் எந்தப் போரிலும் தோற்க மாட்டான். தன்னை மட்டுமே அறிந்து எதிரியை அறியாதவன் சில போர்களில் வெற்றி பெறுவான். சில போர்களில் தோற்பான். தன்னையும் அறியாமல், எதிரியையும் அறியாதவன் எந்தப் போரிலும் பெற்றிபெறமாட்டான். வெற்றிபெறப்போகும் படை முதலில் மனதளவில் வெற்றியை நிர்ணயித்துக்கொள்ளும். பின்னரே போர்க்களத்திற்குச் செல்லும். தோல்வியுறப் போகும் படை முதலில் போர்க்களத்திற்குச் செல்லும் பின்னரே வெற்றிபெறப் போராடும். போரில் புயற்காற்றைப்போல் வேகமெடுக்க வேண்டும். அடர்ந்த காட்டைப்போல் அமைதி காக்க வேண்டும்.

போர் வீரர்களை பிறந்த குழந்தைகளைப் போல் நடத்து, அவர்கள் உன்னுடன் ஆழ்கடலுக்கு கூட வருவார்கள். போர் வீரர்களை உன் சொந்தக் குழந்தைகளைப்போல் நடத்து, அவர்கள் உன்னுடன் இறப்பதற்குக் கூட தயாராயிருப்பார்கள். போரின் குறைகளை அறிய முடியாதவனால் நிச்சயம் அதன் நிறைகளை அறிய முடியாது.

# யாழ்.கூட்டுறவுத் திணைக்கள கூட்டுறவு அலுவலர்களின் கடமை ஒதுக்கீடுகள்

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் அபிவிருத்திப் பகுதியிலுள்ள கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களின் கடமைகள் 2009ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பின்வரும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் **இ.பாலச்சந்திரன்**–ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள், கொத்தணிகள், சமாசம், சித்த மருத்துவ கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் கண்காணிப்புக் கடமைகளும் அலுவலகக் கடமைகளும்.

**ஐ.நாகேஸ்வரன்**(கூ.அ.அலுவலர், தரம்–1) –தலைமைக்காரியாலயக் கடமைகளுடன் அனலைதீவு ப.தெ.வ.அ.கூ.சங்கக் கண்காணிப்பு.

**வி.சிவகுமார்** (கூ.அ.அலுவலர்–தரம்–2)–கொடிகாமம் ,சங்கானை ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கண்காணிப்பு.

**க.திசாகரன்**(கூ.அ.அலுவலர், தரம்–2) –சுன்னாகம், வேலணை ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கண்காணிப்பு.

**ரி.வித்தககலாநிதி** (கூ.அ.அலுவலர், தரம்–2) பண்டத்தரிப்பு, சங்கானை ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கண்காணிப்பு.

**இ.விஜயமோகனராசா** (கூ.அ.அலுவலர், தரம்–2) -வடமராட்சிக் கொத்தணி, சமாசம் ஆகியவற்றின் கண்காணிப்பு கடமை.

**ரி.செல்வசோதி** (கூ.அ.அலுவலர், தரம்–2) -அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ. சங்கக் கண்காணிப்பு கடமை.

**க.நிமலன்** (கூ.அ.அலுவலர், தரம்–2) -நெடுந்தீவு ப.தெ.வ.அ.கூ.சங்கக் கண்காணிப்புக் கடமை.

**க.சசிகரன்** (கூ.அ.அலுவலர், தரம்–2) -ஊர்காவற்றுறை, சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கண்காணிப்பு.

**பா.சிவபாலன்** (கூ.அ.அலுவலர், தரம்–2) -தென்மராட்சிக் கொத்தணி, வலிகாமம் கொத்தணியின் கண்காணிப்புக் கடமை.

**எஸ்.சிறிதரன்** (கூ.அ.அலுவலர், தரம்–2)-பருத்தித்துறை, கோண்டாவில், மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ. சங்கங்களின் கண்காணிப்புக் கடமை.

**அ.மகேஸ்வரன்** (கூ.அ.அலுவலர், தரம்–2) -யாழ்ப்பாணம், அரியாலை ப.தெ.வ.அ.கூ.சங்கங்களும் சித்த வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களினதும் கண்காணிப்புக் கடமை.

**எஸ்.விமல்ராஜ்** (கூ.அ.அலுவலர், தரம்–2) -காரைநகர், கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கங்களினதும் கண்காணிப்புக் கடமை.

## பிரதிநிதிகள் பெயர் விபரம் அனுப்பவும்

2009ம் ஆண்டுக்கான கற்பகம் திங்கள் இதழ் வெளியீட்டுக்கு பத்திரிகைக் குழு பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு வசதியாக ஒவ்வொரு சங்கங்களும் ஒவ்வொரு கொத்தணிகளும் துறைசார்ந்த அனுபவமுள்ள ஒவ்வொரு பிரதிநிதிகளை தெரிவு செய்து அனுப்புமாறு சமாசம் கேட்டுக்கொண்டுள்ளது.

## ஷேய்துல்லா... 4ம் பக்க தொடர்ச்சி

கேட்டது குறித்தும் ஷேய்துல்லா ஓநாயிடம் சொன்னான்.

“ஆனால் அவர்களுக்கு நான் ஏன் உதவ வேண்டும்? நான்தான் எப்படியும் பணக்காரனாகப் போகிறேனே!” என்று கூறினான் ஷேய்துல்லா.

இதைக் கேட்டு ஓநாய் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தது.

“சோம்பேறியைத் தேடிக்கொண்டு நான் எங்கும் செல்லவேண்டியதில்லை, தானாகவே அவன் என்னிடம் வந்துவிட்டான். இந்த ஷேய்துல்லாவைக் காட்டிலும் பெரிய முட்டாளும் சோம்பேறியுமான ஒருவனை உலகில் காண முடியாது” என்று ஓநாய் தன்னுள் கூறிக்கொண்டது.

உடனே அது ஷேய்துல்லாமீது பாய்ந்து அவனை அப்படியே விழுங்கிற்று.

முழுச்சோம்பேறி ஷேய்துல்லாவின் கதை அத்தோடு முடிந்தது.

**“சோம்பேறிகள் யாரும் உலகில் வாழத் தகுதியற்றவர்கள்”**

## வருடாந்த ஒன்றுகூடல்

வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச. சமாசத்தின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் கடந்த 27-12-2008 அன்று சங்கத் தலைவர் ஆ.செம்பொற்சோதி தலைமையில் நடைபெற்றது.

இதில் சமாசத் தலைவர் த.சிவலிங்கம், உபதலைவர் க.மெய்யமுகன், இயக்குனர்சபை உறுப்பினர் சி.சிவகுமார், சமாச பொதுமுகாமையாளர் ஜே.பி.குணரட்ணம் மற்றும் சகல பணியாளர்களும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.


## இன்னல்கள் நீக்கி விடிவைத் தந்திடும் இனிய நத்தாரே!

இப்பூவுலகினிலே மன்னவராம் யேசு பிறக்க
இல்லிடமில்லாது சூசையும் மரியும் அலைந்தது போல்
இம்மண்ணினிலே வாழும் மாந்தர்கள் யாவரும்
இயற்கையின் சீற்றத்தினாலும் முடிவுறாத போரினாலும்
இல்லிடங்கள் இழந்து பல துயரினை சுமந்து
இயல்பு வாழ்வுபெற ஏங்கித் தவிக்கும் வேளையில்
இறைமகனாக நீர் அவதரித்து விடுதலை தந்ததுபோல்
இனிமேலாவது நிம்மதியைத் தந்திடும் காலம் கனிந்துவர
இந்நத்தார் தின நன்னாளிலே வேண்டி நின்று
பிறந்திட்ட இவ் இனிய நத்தாரே இனிமையை தந்திடு
என வேண்டி நிற்கிறோம்! – **சி.ஜோ.கொன்விக்ரர்**
**கல்வி உத்தியோகத்தர், பருத்தி.ப.தெ.வ.அ.கூ.ச.**

## கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்க முன்பள்ளிகளின் நிகழ்வுகள்!



ஆசிரியர்தின விழாவில் ஆசிரியைகளும், சங்கப் பணியாளர்களும், நிர்வாகசபை உறுப்பினர்களும்



இணுவில் கலாஜோதி முன்பள்ளி மானவர்களின் சிறுவர் தின நிகழ்வில் சிறார்கள், ஊழியர்கள், நிர்வாகிகள்



தாவடி ஸ்ரீகாளி அம்பாள் முன்பள்ளி ஆசிரியைகள் கௌரவிப்பு.



சங்குவேலி தெற்கு ஸ்ரீ அம்பாள் முன்பள்ளி ஆசிரியைகள் கௌரவிப்பு



வலிகாமம் ப.தெ.வள அ. கூ. சங்கங்களின் கொத்தணியின் கலையரங்க மண்டபத்தில் அங்கத்துவ சங்கங்களின் நெறியாளர் குழு உறுப்பினர்களுக்கான விசேட பயிற்சி நெறியில் மாவட்ட கூட்டுறவு அலுவலர் இ.பாலச்சந்திரன் மங்கள விளக்கேற்றுவதையும், பயிற்சியில் கலந்துகொண்ட நெறியாளர் குழு உறுப்பினர்களையும் கொத்தணித் தலைவர் க.மெய்யழகன், பொதுமுகாமையாளர் க.சுதாகரன் ஆகியோரையும் படங்களில் காணலாம்.


*எமது அங்கத்தவர்கள், பணியாளர்கள், நுகர்வோர், நலன்விரும்பிகள் மற்றும் சகோதர நிறுவனங்களுக்கும் எமது இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகிறோம்!*

*எமது நிறுவனம் பனை வளத்தினை பயன்படுத்தி பல்வேறு வகையான உற்பத்திகளை மேற்கொண்டு துறைசார்ந்த பொருளாதார அபிவிருத்தியில் புதிய பாதையை ஏற்படுத்தி உள்ளது. அந்த வகையில்....*

**எமது உற்பத்திகள்**

* போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு.
* போத்தலில் அடைக்கப்பட்ட சாராயம்.
* பனை வெல்லம்.
* கல்லாக்காரம்
* பனாட்டு.
* ஒடியல்.
* பனம் பாணி.

*எமது உற்பத்திப் பொருட்களை எமது எல்லா விற்பனை நிலையங்களிலும் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.*

**எமது சேவைகள்**

* சேமிப்பு திட்டங்கள்.
* அங்கத்தவர், பணியாளர் கடன் வழங்கல்.
* மகளிர் குழுக்களுக்கு சுயதொழில் விருத்தி.
* அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கல்.
* சமூகநலத் திட்டங்கள்.
* முன்பள்ளிகளை நடாத்துதல்.
* கல்வி அபிவிருத்தி ஊக்குவிப்பு வழங்கல்.

**தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் [வ-து]**

பதிவு இல: J/1591 - 06-03-1972

புகையிரத நிலைய வீதி, மல்லாகம்.


## இலவச உலர் உணவும் ஊக்குவிப்பு படி வழங்கலும்!

தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தனது அங்கத்தவர்கள், பணியாளர்கள் 143 பேருக்கு சுமார் 2லட்சத்து 86 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை இலவசமாக வழங்கியுள்ளதுடன், 2006ம், 2007ம் நிதியாண்டுக் காலத்தில் தொழில் புரிந்த அங்கத்தவர்கள், பணியாளர்கள் 162 பேருக்கு ஊக்குவிப்பு படியாக 5 லட்சத்து 38 ஆயிரத்து தொள்ளாயிரத்து 64 ரூபா 74 சதத்தை வழங்கியுள்ளது.

## மந்திகை வைத்தியசாலைக்கு 25 ஆயிரம் ரூபா அன்பளிப்பு!

பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் மந்திகையிலுள்ள அரசினர் வைத்தியசாலையின் கட்டட புனரமைப்புக்காக ரூபா 25 ஆயிரம் வழங்கியுள்ளதாக சங்கத்தின் பொதுமுகாமையாளர் எம்.வி.இராசலிங்கம் தெரிவித்தார்.

## கொடிகாமம் பொதுச் சந்தையை சங்கம் குத்தகைக்கு எடுத்துள்ளது!

கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கொடிகாமம் பொதுச்சந்தையை 2009ம் ஆண்டு முதல் பொறுப்பேற்று நடத்துவதற்கான அனுமதியை பெற்றுள்ளது.

இச்சந்தையில் மேற்பார்வையாளர்களாக பணிபுரிவதற்காக சங்கத்தின் ஏழு பணியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு இல.52, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2008ம் ஆண்டு டிசெம்பர் மாதம் வெளியிடப்பட்டது.